## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 84 நாள் : 24.04.2024

**பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையிலான குழுவினர், தெலுங்கானா மாநிலம், பெருநகர ஹைதராபாத் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலையின் செயல்பாடுகள் குறித்து இன்று (24.04.2025) பார்வையிட்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாளொன்றுக்கு சராசரியாக 6,150 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, திடக்கழிவு மேலாண்மையின் ஒரு பகுதியாக, கொடுங்கையூரில் குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலை நிறுவப்படவுள்ளது. இதனையொட்டி, இந்த ஆலையின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தெலுங்கானா மாநிலம், பெருநகர ஹைதராபாத் மாநகராட்சியில் ஏற்கனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலையினை பார்வையிடுவதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையிலான குழுவினர் இன்று (24.04.2025) ஹைதராபாத்திற்கு பயணம் மேற்கொண்டு, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைப் பார்வையிட்டனர்.

முதற்கட்டமாக, பெருநகர ஹைதராபாத் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் குறித்தும் மாநகராட்சி ஆணையாளர் திரு. கே. இளம்பரிதி, இ.ஆ.ப., மற்றும் அலுவலர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சேகரமாகும் குப்பைகள் ஹைதராபாத், ஜெகத்கிரிகுட்டாவில் உள்ள திடக்கழிவு செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, குப்பை கழிவுகள் சிப்பங்களாக மாற்றப்பட்டு, ஜவகர் நகரில் உள்ள குப்பைகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலைக்கு அனுப்பப்படும் பணிகளைப் பார்வையிட்டனர்.

பின்னர், ஹைதராபாத் ஜவஹர் நகரில் அமைக்கப்பட்டுள்ள குப்பை கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் ஆலையின் செயல்பாடுகள் முழுவதையும் நேரில் பார்வையிட்டனர். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் பார்வையிட்டனர். இங்குள்ள கட்டுப்பாட்டு அறை, குப்பைகளை எரிபொருளாக்கும் ஆலையின் செயல்பாடுகள்உள்ளிட்ட தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளையும் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து, ஹைதராபாத் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை அலுவலர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, இந்த ஆலையின் செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடி கேட்டறிந்தனர்.

இந்நிகழ்வுகளில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மகேஷ்குமார், ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) திரு.வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திரு. சீ. பாலச்சந்தர், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர். ஜெயராமன், திரு. சு.. ஜீவன், திரு ஜெ. டில்லிபாபு திருமதி எம். ரேணுகா, திரு.ந. அதியமான், திருமதி மோ. குணசுந்தரி, டாக்டர் பூர்ணிமா மற்றும் சென்னை ஹைதராபாத் மாநகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**